**O.S.No.191/2009**

**Date:18.09.2018**

பிரதிவாதி தரப்பு சாட்சி 2 – சாந்தாராம், த–பெ.ராமாச்சாரி

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

4, 5ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

என் பெயர் சாந்தாராம் ஆகும். நான் 2ம் பிரதிவாதி ஆவேன். 4, 5 பிரதிவாதிகள் யார் என்றால் என் பெரியப்பா பேரன்கள் ஆவார்கள். 1 முதல் 3 பிரதிவாதிகள் யார் என்றால் சகோதார்கள் ஆவார்கள். ஆதியில் வாதியின் மூதாதையர்கள் மற்றும், என் மூதாதையர்கள், 4, 5 பிரதிவாதிகளின் மூதாதையர்கள் சேர்ந்து 1928ல் பாகம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். இந்த பிரதிவாதிகள் ஏற்கனவே சர்வே எண்.107–1, 110–1, 110–2 ஆகியவற்றை வாய்க்கிராலாக பாகம் செய்து கொண்டார்கள் என்றால் இல்லை. மேற்படி நிலங்களை வாதியின் தகப்பனார் விவசாயம் செய்து, தற்போது 1ம் வாதி விவசாயம் செய்கிறார் என்றால் இல்லை. 80 வருடமாக வாதி மற்றும் வாதியின் முன்னோர்கள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் இல்லை, எங்கள் அனுபவத்தில் உள்ளது. தாவா 2வது இலக்கச் சொத்தான சர்வே எண்.107–2ல் 4 ஏக்கர் 2 செண்டை பிரதிவாதிகள் வாதிக்கு வாய்க்கிரால் கிரையம் செய்து கொடுத்து விட்டார்கள் என்றால் இல்லை. அவ்வாறு கிரயம் கொடுத்ததால்தான் கூட்டுப்பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண்.107–2ஐயும் வாதிகள்தான் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 1, 2 வாதிகள் தகப்பனார் மற்றும்தற்போது வாதிகள் பெயர்களில் தான் வருவாய்த்துறை ஆவணங்களில் பதிவுகள் உள்ளது என்றால் பட்டா உள்ளது, ஆனால் அவற்றை மாற்றச் சொல்லி, வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வட்டாடசியருக்கு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவாச் சொத்துக்களை வாதிகளின் தகப்பனார் விவசாயம் யெச்து, தற்போது வாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் இல்லை, தண்ணீர் இல்லை என்பதால் விவசாயம் செய்யவில்லை. நான்கைந்து வருடமாகத்தான் தண்ணீர் இல்லை என்றால் எனக்கு விபரம் தெரிந்த காலம் முதல் தண்ணீர் இல்லை. தாவாச் சொத்துக்களை நான் விவசாயம் செய்துவருவதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வாதிகள் தவிர பிரதிவாதிகள் ஒரே வகையறாவைச் சேர்ந்தவர்கள் என்றால் இல்லை. எனவே பி.வா.சா.ஆ.1 பாகபத்திரத்தில் பிரிக்கப்படாத சொத்தாக தாவா பி செட்யூல் சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 4, 5 பிரதிவாதிகளின் மூதாதையர்களுக்கும், எங்கள் மூதாதையர்களுக்கும் பி செட்யூல் சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதியின் மூதாதையர்களுக்க தனியாக ஏ செட்யூல் சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது என்றர்ல சரிதான். 1ம் வாதியின் தகப்பனார் ராமாச்சாரி கடந்த 80 வருடமாக ஏ செட்யூல் சொத்தை அனுபவம் செய்துவருகிறார் என்றால் சரிதான். பி செட்யூல் சொத்துக்களை வாய்க்கிராலாக பாகம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் இல்லை. பி செட்யூல் கூட்டுப்பட்டாவாக உள்ளது என்றால் சரிதான். அந்த கூட்டுப்பட்டாவில் வாதியின் தகப்பனார் பெயரும் உள்ளது என்றால் இல்லை. என் பெயரில் தனிப்பட்டா உள்ளதா என்றால் இல்லை. தனிப்பட்டா உள்ளதா என்றால் உள்ளது. அது கைவசம் உள்ளதா என்றால் வீட்டில் உள்ளது. அதை தாக்கல் செய்ய தயராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். வாதி கூட்டுப்பட்டா தாக்கல் செய்துள்ளார் என்றால் அது தவறானது. பி செட்யூல் சொத்துக்களுக்கு கிஸ்தி செலுத்தியுள்ளேனா என்றால் செலுத்தியுள்ளேன். வாதிகள்தான் கிஸ்தி செலுத்தியுள்ளனர் என்றால் சரியல்ல. ஏ செட்யூலில் பாகவிஸ்தியில் ஒதுக்கப்பட்ட சொத்தும், வாய்க்கிராக கிரையம் பெற்ற சொத்தும் வாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் இல்லை. நான் மற்றும் 4, 5 பிரதிவாதிகள் ஒற்றுமையாக, சுமுக உறவோடு உள்ளோமா என்றால் சரிதான். 4, 5 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்துப்பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன். அதில் வாய்க்கிரால் கிரையம் செய்து, வாதிகள் அனுபவம் செய்து வருவதாக சொல்லியுள்ளார் என்றால் சொல்லியுள்ளார், ஆனால் அது தவறு ஆகும். எனக்கு பாகப்பத்திரத்தில் கிடைத்த சொத்தில் சர்வே எண்.108, 109 எனக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அது தற்போது இல்லை. சர்வே எண்.108ல் 1 ஏக்கர் 30 செண்டு, 109ல் 4 ஏக்கர் 74 செண்டு, மொத்தம் ஆறு ஏக்கர் 4 செண்டு என்றால் சரிதான். அந்த சொத்துக்களை ஏன் அனுபவிக்கவில்லை என்றால் அரசாங்கம் எடுத்துக் கொண்டார்கள். அரசாங்கம் எடுத்துக் கொண்டதற்கு என்னிடம் ஆவணம் உள்ளதா என்றால் வழக்கறிஞரிடம் உள்ளது. தாவா பி செட்யூல் சொத்துக்களை எந்த காலத்திலும் அனுபவித்து வந்ததில்லை என்றால் சரியல்ல. நான் பட்டா, சிட்டா மாற்றம்

செய்வதற்கு முயற்சித்தேனா என்றால் முயற்சித்தேன். நாளது தேதி வரை பட்டா மாற்றம் செய்யப்படவில்லை என்றால் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதால் முடிவெடுக்க முடியாது என்று தெரிவித்து விட்டனர். நான், 1, 4, 5 பிரதிவாதிகளுக்கு விரோதமாக என் பாக சொத்து என்று சொல்லி 24.02.2001ல் பதிவுக் கிரைய ஒப்பந்தம் செய்துள்ளேன் என்றால் அவ்வாறு கிரைய ஒப்பந்தம் எதுவும் செய்யவில்லை. ராகவேந்திரன், நான் அவருக்கு மோசடியாக கிரையம் செய்து கொடுக்க முயற்சிப்பதாக தெரிவித்து அசல் வழக்கு எண்.289-2010 தாக்கல் செய்துள்ளார் என்றால் அது முடிந்து விட்டது. இரண்டாவது வழக்கின் எண் தெரியுமா என்றால் தெரியாது. 447-2009 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால் தாக்கல் செய்திருந்தார். அவரை மறைத்து கிரையம் செய்ய முயற்சித்ததால் அந்த வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அவர் எங்களுடன் தற்போது சேர்ந்து விட்டார். வழக்குகள் நிலுவையில் இருப்பதாக ராமாச்சாரி சாட்சியம் அளித்துள்ளார் என்றால் இல்லை, வழக்குகள் முடிவடைந்து விட்டது. அசல் வழக்கு எண்.385-2008ஐ தாக்கல் செய்து, அந்த வழக்கு தற்போதும் நிலுவையில் உள்ளது என்று ராமாச்சாரி சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சொல்லியிருந்தால் சரி. குமரேசன் என்பது யார் என்றால் என் அக்கா மகன் ஆவார். அவருக்கு பொது அதிகாரம் அளித்துள்ளேன் என்றால் இல்லை. வில்லங்க சான்றிதழில் நான் பொது அதிகாரம் அளித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பொய்யானது ஆகும். ஏ செட்யூல் சொத்துக்கள் வாதிகளின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றாலும், பி செட்யூல் கூட்டுப்பட்டாவாகவும் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. நான் மரத்தை வெட்டி சுத்தம் செய்துள்ளதாக கூறுவதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. நான் மரத்தை வெட்டி சுத்தம் செய்துள்ளதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ராமாச்சாரி தாக்கல் செய்துள்ள இரண்டு வழக்குகளும் நிலுவையில் உள்ளது என்றால் இல்லை. யு.,டி.ஆர் பட்டா 1996ல் வந்துள்ளது என்றால் வருடம் தெரியாது. ஆனால் மாற்றியுள்ளனர். யூ.டி.ஆருக்கு முன்னதாகவே வருவாய்த்துறை ஆவணங்கள் வாதிகள்பெயர்களில் ஏற்பட்டுள்ளது என்றால் ஏற்படுத்தியிருப்பார்கள். தாவாச் சொத்துக்களில் மோதிலால் என்பவருக்கு பாத்தியம் உள்ளதா என்றால் அவருக்கும், எங்களுக்கும்எந்த சம்பந்தமும் கிடையாது. மோதிலால் அவருக்கும் சொத்துக்களில் பாத்தியம் உள்ளதாக தெரிவிக்கிறார் என்றால் அதுதவறானது ஆகும். என் சொத்தை மோதிலால் அவரது பாகத்திற்கு கிடைத்துள்ளதாக தெரிவித்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா ஏ மற்றும் பி செட்யூல் சொத்துக்களை வாதிகள் அனுபவித்து, அவர்கள் பெயர்களில் பட்டா ஏற்பட்டு, அவர்கள் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் இருக்கலாம், ஆனால் அனுபவம் எங்கள்

வசம்தான் உள்ளது. அவர்கள் அசல் வழக்கு எண்.191-2009ல் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். ஆனால் அவை உண்மையானவை இல்லை.